Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No STC.No. 1939/2024
DEPOSITION OF COMPLAINANT SIDE EVIDENCE No. 1 Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. பிபாகரன் | | |
| தந்தை/கணவர் பெயர் | திரு. மதேஸ்வரன் | தொழில் | வியாபாரம் |
| கிராமம் | திருப்பத்தூர் | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 40 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 )on the 10th day of March 2026.

**சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**புசா.1 திரு. பிரபாகரன் முதல் விசாரணை.-** (எதிரி ஆஜர்)

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். ஜெராக்ஸ்கடை வைத்து வியாபாரம் செய்து வருகிறேன். எனது முதல் விசாரணையை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். நான் படித்து பாரத்துதான் கையொப்பம் செய்தேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தை எனது முதல் விசாரணையின் ஒரு அங்கமாக ஏற்றுக்கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

குற்றம் சாட்டப்பட்டவர் எனக்கு கொடுத்த 01.10.2024 தேதியிட்ட ரூ.7,00,000/- க்கான ஈயுட்டாஸ் வங்கி, திருப்பத்தூர் கிளை காசோலை எண்.000015 அசல் தாக்கல் செய்கிறேன் (அந்த ஆவணம் என்னால் **பு.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) மேற்படி காசோலைக்கான 03.10.2024 ம் தேதியிட்ட KVB வங்கி ரிட்டன் மெமோ அசல் தாக்கல் செய்கிறேன் (அந்த ஆவணம் என்னால் **பு.த.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) 14.10.2024 ம் தேதியில் குற்றம் சாட்டப்பட்டவருக்கு எனது வழக்கறிஞர் மூலம் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு நகல் தாக்கல் செய்கிறேன் (அந்த ஆவணம் என்னால் **பு.த.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) 13.11.2024 ம் தேதியில் எதிரிக்கு அனுப்பப்பட்ட சட்ட அறிவிப்பை அவர் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் நிலையத்தில் இருந்து வழங்கப்பட்ட தபால் தாக்கல் செய்கிறேன் (அந்த ஆவணம் என்னால்

**பு.த.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) புகார் படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் எதிரி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோலுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கபடுகிறது.

Sd/-K.S.Dinesh.,B.A.,B.L.,(Hons)
Judicial Magistrate No.I,
Tirupattur.